


**17. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

**1. நாட்டின் கலாச்சார விழிப்புணர்வுக்கு தூய்மையே அடித்தளம் என்று** குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2. தேசத்தின் இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புகளை கண்டறிய** வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் வலியுறுத்தியுள்ளார்.

**3. சென்னை ஓப்பன் சர்வதேச மகளிர் சாம்பியன்பட்ட போட்டிகள்** மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் வரும் அக்டோபர் மாதம் தமிழகத்தில் நடைபெறும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதிஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**4. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 10 அம்ச கோரிக்கைகளை** வலியுறுத்தி தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

5. **ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர்** காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அனுபமா உபாத்யாய - சீனாவின் **Zhi Yi Wang-**கை இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**நாட்டின் கலாச்சார விழிப்புணர்விற்கு தூய்மையே** அடித்தளம் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஸ்வச் சர்வேக்ஷன் தூய்மை நகர விருதுகளை இன்று வழங்கி பேசியஅவர், மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தூய்மையை முன்னெடுத்துச் செல்ல மேற்கொண்டுள்ள சிறப்பு முயற்சிகளை பாராட்டியுள்ளார்.

ஸ்வச் சர்வேக்ஷன் தூய்மை விழிப்புணர்வு ஒருவெற்றிகரமான இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று மகிழ்ச்சி அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய அரசின் வருடாந்திர தூய்மை விருதின் கீழ் நாட்டின் தூய்மையான நகரம் விருதை மத்திய பிரதேச மாநிலம் இந்தோர் நகரம் தொடர்ச்சியாக 8-வது முறையாக வென்று சாதனை படைத்துள்ளது.

2-வது இடத்தை சூரத்தும்

3-வது இடத்தை நவி மும்பையும் கைப்பற்றியுள்ளன.

இந்நிகழ்வில் பல்வேறு பிரிவுகளில் 78 விருதுகள் வழங்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு சூப்பர் தூய்மை லீக் நகரங்கள் விருதும்,

5 வகை மக்கள் தொகை அடிப்படையில் 3 தூய்மை விருதுகளும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

**குடியரசு துணைத்தலைவர்**

**நம் தேசம் கடந்த 10 ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சி** கண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பொதுமக்களின் நலனை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இல்லந்தோறும் மின்சாரம், கழிவறை, எரிவாயு இணைப்பு, இணையவசதி உள்ளிட்டவை ஏற்படுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் கட்டமைப்பு பிரிவு மேம்பாடு பிரம்மாண்டமாக வளர்ச்சி கண்டுள்ளது என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இளையோர் அரசு வேலைவாய்ப்புகளுக்காக காத்துக்கொண்டிராமல் புதிய வாய்ப்புகளை கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி பீஹார் மாநிலத்தில் ரயில்வே,** நெடுஞ்சாலை, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் 7 ஆயிரத்து 217 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை நாளை தொடங்கிவைக்கிறார்.

தொடர்ந்து பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் அவர், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கும் கடனுதவிகளை வழங்கவுள்ளார்.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**தமிழ்நாட்டில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக** மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேர்தலை கருத்தில் கொண்டே பல்வேறு திட்டங்களை தமிழக அரசு அறிவித்து வருவதாக அவர் குறைகூறினார்.

வரும் சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் திமுகவிற்கு தக்கபாடம் புகட்டுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

**சுதந்திர போராட்ட வீரர் பொல்லானின் 220-வது நினைவு தினம்** இன்று கடைப்பிடிக்கப்படுவதை ஒட்டி அன்னாருக்கு அஞ்சலி செலுத்திய அவர், நாட்டின் விடுதலைக்கு அவர் ஆற்றிய தியாகங்கள் என்றென்றும் போற்றப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நகராட்சி** நிர்வாகம், குடிநீர் வழங்கல்துறை சார்பிலான வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணைமுதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதனிடையே திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையத்தின் காணொலியை பகிர்ந்துள்ள முதலமைச்சர், மாநிலத்திலேயே முதன்முறையாக முழுயான குளிர்சாதன வசதிகளுடன் திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் உருவாகியுள்ளதாக எடுத்துரைத்தார்

2 அடுக்குகளை கொண்ட இம்முனையம் தரைதளத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கும்,

முதல் தளத்திலிருந்து நகரப்பேருந்துகளும் இயக்கப்படுவதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**துணை முதலமைச்சர்**

**தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளுக்கு பின்னர் சென்னை ஓப்பன்** சர்வதேச மகளிர் சாம்பியன்பட்ட தொடர் வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று சாம்பியன்பட்ட போட்டிகள் குறித்த அறிமுக நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நுங்கம்பாக்கம் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானத்தில் வரும் அக்டோபர் 27-ம் தேதி தொடங்கி நவம்பர் 22-ம் தேதிவரை இந்த போட்டிகள் நடைபெறும் என்றார்.

விளையாட்டு துறைக்கு மாநில அரசு அளித்து வரும் முக்கியத்துவத்தையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர்** திருக்கோவிலுக்குள் பக்தர்கள் அலைப்பேசியை எடுத்துச்செல்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

கோவில் வளாகத்தில் பக்தர்களிடம் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்த அவர், தரிசனத்தை விரைவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**.. வாய்ஸ் ..**

முன்னதாக திருக்கோவில் மாடவீதி ராஜகோபுரம் உள்ளிட்ட பகுதிகளை மாநில அமைச்சர் திரு.எ.வ.வேலுவுடன் இணைந்து அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

**சிவகாசியில் 32 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்** 50 படுக்கைகள் கொண்ட உயர் தீக்காய சிகிச்சைபிரிவு கட்டும் பணி தொடங்கப்பட்டு உள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் 14 புதிய மருத்துவ கட்டடங்களை இன்று திறந்துவைத்து பேசியஅவர், ராஜபாளையம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்**

**தமிழ்நாட்டில் பகுதி நேர ஆசிரியர்களை பணிநிரந்தரம்** செய்யவேண்டும், பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு தொடக்க கல்வி ஆசிரியர் சங்க கூட்டமைப்பினர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகே சாலை மறியலில் ஈடுபட முயன்ற 200-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சை, ஈரோடு மாவட்டங்களிலும் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

**கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** முதல்போக புன்செய் பயிர் சாகுபடிக்காக இன்றுமுதல் நவம்பர் 13-ம் தேதிவரை 120 நாட்களுக்கு மொத்தம் 609 மில்லியன் கனஅடி வீதம் சுழற்சிமுறையில் 8 தவணைகளாக தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்மூலம் இப்பகுதிக்குட்பட்ட 8 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 17 ஆயிரத்து** 880 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக 18 ஆயிரத்து 500 கனஅடிவீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 119.50 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று 18 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

❖❖❖❖❖❖

**இருவரி**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் அருகே லாகூடலூர்** ஊராட்சியில் திறக்கப்பட்டுள்ள கால்நடை கிளை நிலையத்தில் கால்நடைகளுக்கான முதலுதவி, குடற்புழு நீக்கம் உள்ளிட்ட

பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதால் கால்நடை வளர்ப்போர் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**நாகை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பிற்காக** இல்லம் தேடி வரும் முன்கள பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் தெருநாய்கள் மட்டுமின்றி வீடுகளில்** வளர்க்கப்படும் நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தாலோ, கீறல்கள் ஏற்படுத்தினாலோ உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளில் ரேபிஸ் நோய் தடுப்பூசியினை அட்டவணைப்படி செலுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**காஞ்சிபுரம் மாநகராட்சி கூட்டம் மேயர் திருமதி. மகாலட்சுமி** யுவராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதில் குடிநீர், தெருவிளக்கு, பாதாள சாக்கடை உள்ளிட்ட பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

**சேலம் வாய்ஸ்**

**ஆடிமாத பிறப்பை முன்னிட்டு சேலம் மாவட்டத்தில் பாரம்பரிய** வழக்கப்படி தேங்காய் சுடும் திருவிழா வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**வானிலை**

**வளி மண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் மேற்கு** திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கன மிக கனமழையும்,

தேனி திண்டுக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழையும் பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு** முந்தைய சுற்றில் இந்தியாவின் அனுபமா உபாத்யாய - சீனாவின் **Zhi Yi Wang**-கை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**பிரக்ஞானந்தா**

**அமெரிக்கா லாஸ் வேகஸில் Free Style கிராண்ட்ஸ்லாம் சதுரங்க** போட்டியின் காலிறுதிக்கு இந்தியாவின் பிரக்ஞானந்தா முன்னேறியுள்ளார்.

நார்வே நாட்டின் செஸ் சாம்பியன் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார்.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 2-வது** ஒருநாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖